COLLECTOR'S OFFICE
6 APR 2000
VILLUPURAM

26575

சுருக்கம்

பொது பாதை வழி நிலங்களை தனியார் தகவல் தொடர்பு நிறுவனங்கள் பயன்படுத்துதல் – தளவாடகை விதித்தல் – ஆணைகள் வெளியிடப்படுகின்றன.

வருவாய் (நி.நி.5(2)) துறை

அரசாணை (நிலை) எண். 172, நாள் 28.3.2000.

படிக்கவும் :–

அரசாணை (நிலை) எண்.1002, வருவாய், நாள் 2.12.93.

ஆணை :

அரசுப் புறம்போக்கு நிலங்களில் விவசாயத்திற்காக குழாய் பதிக்க அரசாணை எண்.1002, வருவாய், நாள் 2.12.93–இல், குறிப்பிட்டுள்ளவாறு தளவாடகை விதிக்கப்படுகிறது.

2. தனியார் தகவல் தொடர்பு நிறுவனங்கள் பொது பாதை வழி நிலங்களை வியாபார நோக்கத்திற்காக பயன்படுத்துகின்றன. எனவே, 1993–இல் நிர்ணயிக்கப்பட்ட தளவாடகையை அடிப்படையாக வைத்துக்கொண்டு, குறிப்பிட்ட வியாபார நோக்கத்தை கருத்தில்கொண்டு, மாற்றியமைத்தல் அவசியம் ஆகிறது. இது குறித்து அரசு நன்கு ஆய்வு செய்தது. தனியார் தகவல் தொடர்பு நிறுவனங்களுக்கு தளவாடகை நிர்ணயம் செய்வதைப் பொறுத்தவரை அரசு பின்வருமாறு முடிவு செய்துள்ளது :–

1993–ஆம் ஆண்டு, ஐந்து வகையாக பிரிக்கப்பட்ட தளவாடகை உள்ளாட்சி நிறுவனங்களை சட்ட திருத்தங்களைக் கருத்தில்கொண்டு தற்பொழுது நான்கு வகையாக பிரித்திடப்பட வேண்டும். அவை :–

(அ) (1) கிராம ஊராட்சிகள்;
(2) பேரூராட்சிகள்/நகராட்சிகள்;
(3) மதுரை, சேலம், கோயம்புத்தூர், திருச்சி, திருநெல்வேலி மாநகராட்சிகள்;
(4) சென்னை மாநகராட்சி

(ஆ) : வியாபார நோக்குடன் அனுமதி கோரும் தகவல் தொடர்பு நிறுவனங்களுக்கு 1993–ஆம் ஆண்டு, தளவாடகைகள், இரு மடங்காக்கி அடிப்படையாக அமைத்திடல் வேண்டும்.

(இ) : பேரூராட்சிகள் மற்றும் நகராட்சிகளுக்கு புதிய வகைபாடு மாற்றத்தினால் ஒரு இடைப்பட்ட விகிதம் அமைத்திடல் வேண்டும்.

3. இதன்படி, தனியார் தகவல் தொடர்பு நிறுவனங்களுக்கு தளவாடகை பின்வருமாறு நிர்ணயம் செய்தும், இவ்வாறு நிர்ணயிக்கப்பட்டுள்ள

/2/

தளவாடகை மூன்று ஆண்டுக்கொருமுறை மாற்றியமைக்கப்பட வேண்டும் என்றும் அரசு ஆணையிடுகிறது:-

வ.எண். (1)	இனம் (2)	நிர்ணயிக்கப்பட்ட தளவாடகை (3)
1)	கிராம ஊராட்சிகள்	ரூ.4,400/- (ஒரு மீலோ மீட்டருக்கு) ஒரு ஆண்டிற்கு (தல நீர்வை / உபரி தலத் நீர்வை வீட்டிட)
2)	பேரூராட்சிகள் / நகராட்சிகள்	ரூ.5,500/- (ஒரு மீலோ மீட்டர் / ஒரு ஆண்டிற்கு)
3)	மதுரை, சேலம், கோயம்புத்தூர், திருச்சி, திருநெல்வேலி மாநகராட்சிகள்	ரூ.6,600/- (ஒரு மீலோ மீட்டர் / ஒரு ஆண்டிற்கு)
4)	சென்னை மாநகராட்சி	ரூ.9,400/- (ஒரு மீலோ மீட்டர் / ஒரு ஆண்டிற்கு)

4. மேலும், நில நிர்வாக ஆணையர், தளவாடகையினை மூன்று ஆண்டுகளுக்கொருமுறை மாற்றியமைக்க நடவடிக்கை எடுத்து, அதற்கான செயல் குறிப்புகளை அரசுக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

5. இந்த ஆணை நிதித்துறையின் அலுவல் சார்பற்ற குறிப்பு எண்.616/FS/E/2000, நாள் 28.2.2000 ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

தேவேந்திரநாத் சாரங்கி,
அரசின் செயலாளர்.

பெறுநர்

சிறப்பு ஆணையர் மற்றும் நில நிர்வாக ஆணையர், சென்னை- 600 005.
அனைத்து மாவட்டாட்சியர்கள்/அனைத்து தலைமைப் பொறியாளர்கள், பொதுப்பணித் துறை, சென்னை-5/தலைமைப் பொறியாளர்(தேசிய நெடுஞ்சாலை), சென்னை-5.
மேலாண்மை இயக்குநர், எல்காட், சென்னை - 35.
மாநில கணக்காயர், சென்னை-18/மாநில கணக்காயர், சென்னை -35.

நகல்: தலைமைச் செயலக அலுவலர்களுக்கு உரிய வரைச் சுற்றுரை/
நெடுஞ்சாலைத்துறை/நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கும் துறை/
நிதித்துறை/பொதுப்பணித் துறை, சென்னை - 600 009.
இ.கோ./உ.ப.

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

28.3.2000
பிரிவு அலுவலர்.